Newsletter August 2023 Not for sale

# CHEZHUMAI

**English Version**

The International Small Group & Tree Planting Program
www.tist.org

*TIST is an innovative, time - tested, afforestation program led by the participants*

## ABOUT TIST

'The International Small Group and Tree Planting Program' (TIST) was initiated in 1999 in Tanzania to support subsistence farmers who identified the lack of trees, food insecurity, and diseases as persistent difficulties for their communities. The 'Clean Air Action Corporation', a US-based company (CAAC) joined by the 'Institute for Environmental Innovation' (I4EI) supported a seminar and pilot project for the farmers to work on sustainable development, health, and environmental education. The project aimed to improve the local environmental conditions through a sustainable approach of tree planting, conservation farming, nursery raising, beekeeping, improved stoves, etc., while helping in greenhouse gas reductions.

Subsequently, TIST expanded to work in other countries including India, Kenya, and Uganda. The work in India was initiated in 2003, with a focus on Tamil Nadu.

The norm of TIST is for farmers to form Small Groups (SG) of 6 to 12 farmers, to help improve the local environment and the world's climate through tree planting and other environmentally sustainable efforts. The SGs are also responsible for organizing the TIST program in their area. The farmers plant multipurpose and indigenous trees around their houses, farms, and other common lands, if possible. These trees are quantified meticulously and at the appropriate time enter the carbon credit market

CAAC helps farmers participate in the carbon credit business. Farmers receive a 70% share of the profits from the sales of carbon credit. Profits are created through participating in the carbon business, which involves planting trees and keeping them alive for the long term. TIST also incentivizes the farmers for planting trees by paying a small amount every year of the anticipated profit amount for every live tree even before the trees are ready for the carbon credit market.

Today, over 150,000 TIST farmers in India, Tanzania, Uganda, and Kenya, are successfully planting trees, protecting and creating biodiversity, developing leadership, improving their health

and local environment, adapting farming techniques to meet current environmental challenges, and mitigating climate change.

## TIST Values

At TIST, we follow these values in all our approaches -

- We are HONEST
- We are ACCURATE
- We are TRANSPARENT
- We are SERVANTS TO EACH OTHER
- We are MUTUALLY ACCOUNTABLE
- We CREATE BIG RESULTS WITH LOW BUDGET

## The Greenhouse Gas Contract (GHG Contract)

### What are Greenhouse Gases and the carbon market?

As farmers, you would have seen greenhouses made of glass or other suitable materials that that help cultivate various off-season or high-value crops under controlled conditions of temperature, humidity, etc. A greenhouse traps the sunlight, necessary for photosynthesis along with the carbon present in the air and water provided by the cultivator. In the process, oxygen is released into the air, while carbon is stored in the plants.

In a similar way, greenhouse gases like carbon dioxide, methane, nitrous oxide etc, trap the sunlight entering the earth's atmosphere making the earth warm and habitable. But, over the centuries, due to human activities like heavy industrialization, burning of fossil fuel, deforestation, etc., a lot more such greenhouse gases are released making the earth hotter, and creating difficult conditions for life on earth including global warming and climate change.

Many methods are being adopted by countries and industries to reduce or offset their greenhouse gases, of which carbon dioxide is a significant gas. Planting trees is one way to reduce carbon in the atmosphere. Apart from large-scale forestry programs, tree planting on farmlands including agro-forestry (tree planting along with farming) is also increasing. Carbon sequestered by such planting can be calculated and sold in the carbon market.

To protect the earth from increased temperature, countries and corporations have set targets to reduce their emission of greenhouse gases. Towards this goal, they will reduce their emissions of greenhouse gases as much as possible, and purchase carbon credits from the market to offset remaining emissions.

## How are TIST farmers involved in the carbon credit market?

As we know, TIST farmers are planting trees on their farms with the aim to enter the carbon credit market. The trees that they plant and nurture will be sequestering carbon from the environment. Put simply, your trees are taking in the greenhouse gases like carbon dioxide, acting as a carbon sink and releasing oxygen into the environment. The trees are quantified regularly, helping to calculate the amount of carbon sequestered. The calculation is based on different formulas and takes in the age, species, and circumferences of the trees. Moreover, the value of the carbon credit varies as expected in any market.

## The old GHG Contract and the new GHG Contract

Apart from completing the pending incentive payments, we are currently looking at getting all the registered SGs to sign the GHG contracts, if they haven't done so earlier. We are introducing a new GHG contract that allows for profit sharing to accrue to the SGs much earlier but the farmershave the choice to remain in the old GHG contract if they desire or sign the new GHG contract.

You will recall that as you got associated with TIST, you would have formed Small Groups, planted trees on your farms which would have been quantified regularly by the TIST Cluster Servants, attended TIST Node meetings, been paid incentives per tree in your grove, and received the newsletter, etc.

An important process the SGs would have undertaken is to sign the Greenhouse Gas Contract (GHG), which gives the rights to TIST to sell the carbon sequestered from your trees in the carbon market. The contract also advises the farmers to not cut trees. Starting from the 1st year till the 20th year, each farmer is paid an incentive per tree to encourage them to keep the trees in good health and alive. On entering the 20th year since planting, the trees will be ready to enter the carbon credit market and the SGs would be paid 70% of the profit share of the carbon credit sold in the market.

Now, we are giving the option for the SGs to retain their old GHG contract or sign the new GHG contract. In the new GHG, SGs will receive incentive payments in the early years as a pre-payment on Profit Share. As the trees get bigger and begin to have carbon, the SG will earn 70% o

f the profit, on an ANNUAL basis. The new GHG contract that we will start sharing shortly, will give you an opportunity to receive profit share from the second year itself.

The SGs are free to sign either version of the GHG contracts.

## Keeping the trees alive for long term, Profit Share and value of Co-benefits

When you sign up to be a TIST farmer, initially you are incentivized right from the first year of planting tree saplings on your field to ensure a low mortality rate of your trees. In the early years, the amount per tree is small but either fruit, timber, and later trees for carbon will start to create profits in 3-7 years, and continue to provide a regular income for decades afterward through the sharingof 70% of the profits from the carbon credit sales. If you cut the trees for timber, you only get a one-time payment, and then have to start over by planting new saplings. Our Cluster Servants will guide towards thinning and harvesting, so that you continue to keep you trees alive to receive the Profit Share for long.

Along with the profit share for carbon credit, SGs can also go for Co-benefit ideas like Conservation Farming, using Improved Stoves, raising Bees etc, which we have introduced in previous issues and will elaborate more in the coming issues.

## Update on our work

To work with you all better, we believe in training and upskilling our Cluster Servants. In this regard during our April 2023 monthly staff meeting in, we have discussed two topics – 'Quantifier Safety' that elaborates on the safety measures that our CSs must take as they work and 'Non Discrimination Policy' that details on the strong stand that TIST takes against any discriminatory practices.

We are in the process of paying the pending incentive to all SGs, but due to technical reasons, we were delayed. Now, we have rectified the issue with voucher generation and have successfully generated vouchers that have been shared during the Node meetings. Till July, we have generated over five hundred vouchers for the SGs in sixteen Nodes. We are happy that we have also completed the process of paying over two hundred and thirteen SGs consisting of over five hundred farmers. We hope to complete all pending payments within August, though there are issues of invalid or frozen joint bank accounts due to no activity etc. It is hoped that all members in their respective SGs rectify their bank account information for future payments which will be made only to joint bank accounts.

Now, that all payment issue is on the way to complete resolution, we are looking forward to meeting all our farmers in the monthly Node meetings regularly to understand many things that we do in the Small Groups of TIST- raising nurseries, the importance of biodiversity, selection of appropriate species and their care, gender sensitisation, leadership roles, ideas to support biodiversity and increase livelihoods and income etc. And yes, the Profit Share that will accrue to you every year.

TIST இந்தியா ஆகஸ்ட் 2023

விற்பனைக்கு இல்லை

# செழுமை

தமிழ் பதிப்பு

The International Small Group & Tree Planting Program

www.tist.org

*TIST is an innovative, time - tested, afforestation program led by the participants*

**குறிப்பு :**

டிஐஎஸ்டி **(TIST)** என்பது விவசாயிகளால் வழிநடத்தப்படும் ஒரு புதுமையான மற்றும் ஆய்வு செய்யப்பட்ட காடு வளர்ப்பு திட்டமாகும்

## TIST பற்றி

தி 'இன்டர்நேஷனல் ஸ்மால் குரூப் அண்ட் ட்ரீ பிளேண்டிங் ப்ரோக்ராம்' அதாவது 'சர்வதேச சிறு குழு மற்றும் மரம் நடும் திட்டம்' (TIST – டிஐஎஸ்டி) 1999 ஆம் ஆண்டு அமெரிக்காவை தளமாகக் கொண்ட நிறுவனமான 'கிளீன் ஏர் ஆக்ஷன் கார்ப்பரேஷன்', (CAAC) மற்றும் 'இன்ஸ்டிட்யூட் ஃபார் என்விரோன்மென்டல் இன்னோவேஷன்' (I4EI) மூலம் தான்சானியாவில் வாழ்வாதார விவசாயிகளுக்கான கருத்தரங்கு மற்றும் முன்னோடித் திட்டத்தின் மூலம் நீடித்த வளர்ச்சி, சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் கல்வி ஆகியவற்றில் பணியாற்ற தொடங்கப்பட்டது. பசுமை இல்ல வாயு குறைப்புக்கு உதவும் அதே வேளையில் மரம் நடுதல், பாதுகாப்பு விவசாயம், நாற்றங்கால் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, மேம்படுத்தப்பட்ட அடுப்புகள் போன்றவற்றின் நிலையான அணுகுமுறை மூலம் உள்ளூர் சுற்றுச்சூழல் நிலைமைகளை மேம்படுத்துவதை இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

பின்னர் **TIST** இந்தியா, கென்யா மற்றும் உகாண்டா உள்ளிட்ட பிற நாடுகளில் வேலை செய்ய விரிவடைந்தது. இந்தியாவில், **TIST** 2003 இல் தமிழ்நாட்டை மையமாகக் கொண்டு பணிகளைத் தொடங்கியது.

**TIST** இன் விதிமுறையின்படி, விவசாயிகள் 6 முதல் 12 விவசாயிகளைக் கொண்ட சிறு குழுக்களை (Small Group - SG) உருவாக்கி, மரம் நடுதல் மற்றும் பிற சுற்றுச்சூழல் நிலையான முயற்சிகள் மூலம் உள்ளூர் சூழலையும் உலகின் காலநிலையையும் மேம்படுத்த முயற்சிக்கிறது. சிறு குழுக்கள் தங்கள் பகுதியில் டிஐஎஸ்டி திட்டத்தை ஏற்பாடு செய்வதற்கும் பொறுப்பெடுக்க வேண்டும். விவசாயிகள் தங்கள் வீடுகள், பண்ணைகள் மற்றும் பிற பொதுவான நிலங்களைச் சுற்றி முடிந்தால், பல பயன்பாடுள் மற்றும் உள்நாட்டு மரங்களை நடுகிறார்கள். இந்த மரங்கள் மிக நுணுக்கமாக அளவிடப்பட்டு, உரிய நேரத்தில் கார்பன் வரவினம் (கார்பன் கிரெடிட்) சந்தைக்கு போகின்றன.

கார்பன் வரவினம் வணிகத்தில் விவசாயிகள் பங்கேற்க (CAAC) உதவுகிறது. கார்பன் கிரெடிட் விற்பனை மூலம் கிடைக்கும் லாபத்தில் 70% பங்கை விவசாயிகள் பெறுகின்றனர். கார்பன் வணிகத்தில் பங்கு பெறுவதன் மூலம் இலாபங்கள் உருவாக்கப்படுகின்றன. இதில் மரங்களை நடுவது மற்றும் நீண்ட காலத்திற்கு அவற்றை உயிர்ப்புடன் வைத்திருப்பது ஆகியவை அடங்கும். கார்பன் கிரெடிட் சந்தைக்கு மரங்கள் தயாராகும் முன்பே, ஒவ்வொரு உயிர்ப்புள்ள மரத்திற்கும் எதிர்பார்க்கப்படும் லாபத் தொகையில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு தொகையை செலுத்தி, மரம் நடுவதற்கு விவசாயிகளை TIST ஊக்குவிக்கிறது.

இன்று, இந்தியா, தான்சானியா, உகாண்டா மற்றும் கென்யாவில் 1,50,000 க்கும் மேற்பட்ட TIST விவசாயிகள் வெற்றிகரமாக மரங்களை நட்டு, பல்லுயிர்களைப் பாதுகாத்து மற்றும் விவசாய நுட்பங்களைப் பின்பற்றி, தற்போதைய சுற்றுச்சூழல் சவால்களான காலநிலை மாற்றத்தைத் தழுவுதல் மற்றும் தணித்தல் (Mitigation and Adaptation) ஆகியவைகளை எதிர்கொள்கிறார்கள். மேலும், இதனால் அவர்கள் தலைமைத்துவத்தை வளர்த்து மற்றும் அவர்களின் ஆரோக்கியம் மற்றும் உள்ளூர் சூழலை மேம்படுத்த எதிர்கொள்கிறார்கள்.

## TIST மதிப்புகள்

### TIST இல், எங்கள் எல்லா அணுகுமுறைகளிலும் இந்த மதிப்புகளைப் பின்பற்றுகிறோம்.

- நாங்கள் நேர்மையானவர்கள்
- நாங்கள் துல்லியமானவர்கள்
- நாங்கள் வெளிப்படைத்தன்மையுடையவர்கள்
- நாங்கள் ஒருவருக்கு ஒருவர் சேவை செய்பவர்கள்
- நாங்கள் பரஸ்பரம் பொறுப்பாளிகள்
- நாங்கள் குறைந்த தொகையில் பெரிய பலன்களை உருவாக்குகிறோம்

## பசுமை இல்ல வாயு ஒப்பந்தம் (Green House Gas - GHG ஒப்பந்தம்)

### பசுமை இல்ல வாயுக்கள் மற்றும் கார்பன் சந்தை என்றால் என்ன?

விவசாயிகளாகிய நீங்கள், கண்ணாடி அல்லது பிற பொருத்தமான பொருட்களால் செய்யப்பட்ட பசுமை இல்லங்களை பார்த்திருப்பீர்கள். அவை வெப்பம், ஈரப்பதம் போன்ற கட்டுப்படுத்தப்பட்ட நிலைமைகளின் கீழ் பல்வேறு பருவகால அல்லது அதிக மதிப்புள்ள பயிர்களை பயிரிட உதவுகின்றன.

பசுமை இல்ல வாயு சூரிய ஒளியை ஈர்ப்பதற்கு முக்கியமானது. மேலும், இதன் கூட காற்றில் உள்ள கார்பன்-டை-ஆக்சைடு (CO2) மற்றும் சாகுபடியாளரால் வழங்கப்படும் நீர் ஆகியவை ஒளிச்சேர்க்கைக்கு அவசியம். இதனால், ஆக்ஸிஜன் காற்றில் வெளியிடப்படும் அதே நேரத்தில் கார்பன் டை ஆக்சைடு தாவரங்களில் சேமிக்கப்படுகிறது.

அதே வழியில், கார்பன் டை ஆக்சைடு, மீத்தேன், நைட்ரஸ் ஆக்சைடு போன்ற பசுமை இல்ல வாயுக்கள், பூமியின் வளிமண்டலம் சூரிய ஒளியை உள்வாங்கி, பூமியை வெப்பமாகவும் வாழக்கூடியதாகவும் ஆக்குகிறது. ஆனால், பல நூற்றாண்டுகளாக, அதிக தொழில்மயமாக்கல், புதை படிவ எரிபொருளை எரித்தல், காடழிப்பு போன்ற மனித நடவடிக்கைகளால், பல பசுமை இல்ல வாயுக்கள் பூமியை அதிக வெப்பமாக்குகின்றன, மேலும் புவி வெப்பமடைதல் மற்றும் காலநிலை மாற்றம் உட்பட பூமியில் வாழ்வதற்கு கடினமான சூழ்நிலைகளை உருவாக்குகின்றன.

கார்பன் டை ஆக்சைடு கணிசமான வாயுவாக இருக்கும் பசுமை இல்ல வாயுக்களை குறைக்க அல்லது ஈடுகட்ட, நாடுகள் மற்றும் தொழிற்சாலைகள் பல முறைகளை பின்பற்றப்படுகின்றன. மரங்களை நடுவது வளிமண்டலத்தில் உள்ள கார்பனை குறைக்க ஒரு வழியாகும். பெரிய அளவிலான வனவியல் திட்டங்களைத் தவிர, வேளாண் காடுகள் (விவசாயத்துடன் மரம் நடுதல்) உள்ளிட்ட விவசாய நிலங்களில் மரம் நடுவது அதிகரித்து வருகிறது. இந்த மரங்களால் சேமித்த கார்பன்–டை–ஆக்சைடு, கார்பன் வரவினம் கணக்கிடப்பட்டு விற்கப்படுகிறது.

அதிக வெப்பத்திலிருந்து பூமியைப் பாதுகாக்க, நாடுகளும் பெருநிறுவனங்களும் பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வைக் குறைக்க இலக்குகளை நிர்ணயித்துள்ளன. இந்த இலக்கை நோக்கி, அவர்கள் பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வை முடிந்தவரை குறைத்து மற்றும் கார்பன் வரவினம் சந்தையில் இருந்து வாங்குவார்கள்.

## கார்பன் வரவினம் சந்தையில் TIST விவசாயிகள் எவ்வாறு ஈடுபட்டுள்ளனர்?

கார்பன் வரவினம் சந்தையில் நுழையும் நோக்கத்துடன் **TIST** விவசாயிகள் தங்கள் பண்ணைகளில் மரங்களை நடுவது நமக்குத் தெரியும். அவர்கள் நட்டு வளர்க்கும் மரங்கள் சுற்றுச்சூழலில் இருந்து கார்பன் டை ஆக்சைடைப் பிரித்தெடுக்கும். எளிமையாகச் சொன்னால், உங்கள் மரங்கள் கார்பன் டை ஆக்சைடு போன்ற பசுமை இல்ல வாயுக்களை உள்வாங்கி, ஒரு கார்பன் மடுவாகச் (Carbon Sink) செயல்படுகின்றன மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஆக்ஸிஜனை வெளியிடுகின்றன. சிறு குழுக்களில் உள்ள மரங்கள் தொடர்ந்து அளவிடப்படுகின்றன. இது கார்பனின் அளவைக் கணக்கிட உதவுகிறது. மரங்களின் வயது, இனங்கள் மற்றும் சுற்றளவு ஆகியவற்றின் அடிப்படையில், வெவ்வேறு சூத்திரங்களின் (formula) மூலம் கார்பன் சேகரிப்பதை கணக்கிடப்படுகிறது. மேலும், எந்தச் சந்தையிலும் எதிர்பார்த்தபடி கார்பன் வரவினம் மதிப்பு மாறுபடும்.

## பழைய GHG ஒப்பந்தம் மற்றும் புதிய GHG ஒப்பந்தம்

சிறு குழுக்களின் நிலுவையிலுள்ள ஊக்கத் தொகைகளை நிறைவு செய்வதைத் தவிர, பதிவு செய்த சிறு குழுக்கள் GHG ஒப்பந்தங்களில் முன்பு கையெழுத்திடவில்லை என்றால், நாங்கள் தற்போது அவர்களை ஒப்பந்தங்களில் கையெழுத்து போட வைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறோம். மேலும், நாங்கள் ஒரு புதிய GHG ஒப்பந்தத்தை அறிமுகப்படுத்துகிறோம். இது இலாபப் பங்குகளை (Profit Share - PS) சிறு குழுக்களுக்கு முன்பே கிடைக்க உதவுகிறது, ஆனால், விவசாயிகள் புதிய GHG ஒப்பந்தத்தில் கையெழுத்திடலாம் அல்லது அவர்கள் விருப்பப்படி பழைய GHG ஒப்பந்தத்திலும் தொடரலாம்.

நீங்கள் **TIST** உடன் இணைந்திருக்கும்போது, நீங்கள் சிறு குழுக்களை உருவாக்கி, உங்கள் பண்ணைகளில் மரங்களை நட்டு, **TIST** கிளஸ்டர் சேவகர்கள் தொடர்ந்து அளவீடு செய்திருப்பார்கள், **TIST** முனை கூட்டங்களில் கலந்துகொண்டிருப்பீர்கள், உங்கள் தோப்பில் உள்ள ஒரு மரத்திற்கு ஊக்கத்தொகையை வாங்கியிருப்பீர்கள், செய்திமடல் முதலியவற்றைப் பெற்றிருப்பீர்கள்.

பசுமை இல்ல வாயு ஒப்பந்தத்தில் (GHG) கையெழுத்திடுவது, சிறு குழுக்கள் மேற்கொள்ளும் ஒரு முக்கியமான செயல்முறையாகும், இது உங்கள் மரங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட கார்பனை, கார்பன் சந்தையில் விற்க **TIST**-க்கு உரிமை அளிக்கிறது. விவசாயிகள் மரங்களை வெட்ட வேண்டாம் என்றும் ஒப்பந்தத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. முதலாம் ஆண்டு தொடங்கி இருபதாம் ஆண்டு வரை, ஒவ்வொரு விவசாயிக்கும் ஒரு மரத்துக்கு ஊக்கத் தொகை வழங்கப்பட்டு, மரங்களை செழிப்புடன், அழியாமல் வைத்திருக்க ஊக்குவிக்கப்படுகிறது. மரம் நட்டு இருபதாவது வருடத்தில், மரங்கள் கார்பன் கிரெடிட் சந்தையில் நுழைய தயாராக இருக்கும், மேலும், சந்தையில் விற்கப்படும் கார்பன் கிரெடிட்டின் லாப பங்கில் 70% SG-களுக்கு வழங்கப்படும்.

இப்போது, நாங்கள் சிறு குழுக்களின் விருப்பப்படி, அவர்கள் பழைய GHG ஒப்பந்தத்தைத் தொடரவும் அல்லது புதிய GHG ஒப்பந்தத்தில் கையெழுத்திடவும் வாய்ப்பு அளிக்கிறோம். புதிய GHG அடிப்படையில், சிறு குழுக்கள் ஆரம்ப ஆண்டுகளிலேயே லாபப் பங்கிலிருந்து ஒரு பங்கு முன்பணமாக ஊக்கத் தொகைகளை பெறுவார்கள். மரங்கள் பெரிதாகி, கார்பனைப் பெறத் தொடங்கும் போது, சிறு குழுக்கள் ஆண்டு அடிப்படையில் கிடைக்கும் லாபத்தில் 70% ஐ பெற்றுக் கொள்ளும்.

சிறு குழுக்கள், GHG ஒப்பந்தங்களின் எந்த பதிப்பிலும் கையெழுத்திட தடையில்லை.

## நீண்ட காலத்திற்கு மரங்களை உயிர்ப்புடன் வைத்திருப்பது, இலாபப் பங்கு மற்றும் இணை பலன்களின் மதிப்பு

நீங்கள் TIST விவசாயியாக பதிவு செய்யும் போது, உங்கள் மரங்களின் குறைந்த இறப்பு விகிதத்தை உறுதி செய்வதற்காக, உங்கள் வயலில் மரக் கன்றுகளை நட்ட முதல் வருடத்திலிருந்தே உங்களை ஊக்கப்படுத்த ஊக்கத்தொகை அளிக்கப்படுகிறது. ஆரம்ப ஆண்டுகளில், ஒரு மரத்தின் சுற்றளவு சிறியதாக இருந்தாலும், 3-7 ஆண்டுகளில் பழங்கள், மரக் கட்டைகள் மற்றும் கார்பனுக்கான லாபத்தை உருவாக்கத் தொடங்கும், மேலும் பல வருடங்களுக்கு கார்பன் வரவினம் விற்பனையின் மூலம் உங்களுக்கு நீண்ட கால தொடர் வருமானத்தை அளிக்கும். மரக் கட்டைக்காக மரங்களை வெட்டினால், ஒருமுறை மட்டுமே வருமானம் கிடைக்கும், அதன்பிறகு மறுபடியும் கார்பன் சந்தைக்கு வருவதற்கு புதிய மரக்கன்றுகளை நட வேண்டும். எங்களின் கிளஸ்டர் சேவகர்கள் மரத்தை கழிப்பதற்கு (மெலிதல்) மற்றும் அறுவடைக்கு ஆலோசனை அளிப்பார்கள், இதன் மூலம் நீங்கள் நீண்ட காலத்திற்கு லாபப் பங்கைப் பெறுவதற்கு மரங்களை உயிர்ப்புடன் வைத்திருப்பீர்கள்.

கார்பன் கிரெடிட்டுக்கான லாபப் பங்குடன், சிறு குழுக்கள் பாதுகாக்கப்பட்ட விவசாயம், மேம்படுத்தப்பட்ட அடுப்புகளைப் பயன்படுத்துதல், தேனீக்களை வளர்ப்பது போன்ற இணை-பயன் யோசனைகளை செய்யலாம். இவைகளை முந்தைய இதழ்களில் நாங்கள் அறிமுகப்படுத்தியுள்ளோம், மேலும் வரும் இதழ்களில் விரிவாகக் கூறுவோம்.

## எங்கள் வேலையின் தற்போதைய நிலவரம்

உங்களுடன் சிறப்பாகப் பணியாற்ற, எங்கள் கிளஸ்டர் சேவகர்களுக்குப் தொடர் பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு அளிப்பதில் நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். இது சம்பந்தமாக, ஏப்ரல் 2023 மாதாந்திர பணியாளர் கூட்டத்தின் போது, நாங்கள் இரண்டு தலைப்புகளைப் பற்றி விவாதித்தோம் - வேலை செய்யும் போது எங்கள் பணியாளர்கள் கவனிக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் – 'அளவிப்பான்களின் (கிளஸ்டர் சேவகர்கள்) பாதுகாப்பு' மற்றும் TIST-ன் வலுவான எந்தவொரு பாகுபாடு செயல்களை எதிர்கொள்ளும் கொள்கையான 'பாகுபாடு இல்லாத கொள்கை' -க்கு பயிற்சி அளிக்கும்.

அனைத்து சிறு குழுக்களுக்கும் நிலுவையில் உள்ள ஊக்கத்தொகையை செலுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளோம், ஆனால் தொழில்நுட்ப காரணங்களால், கால தாமதமானது. இப்போது, வவுச்சர் உருவாக்கத்தில் உள்ள சிக்கலைச் சரிசெய்து, முனை சந்திப்புகளின் போது கொடுக்க வவுச்சர்களை வெற்றிகரமாக உருவாக்கியுள்ளோம். ஜ"லை வரை, பதினாறு முனைகளில் சிறு குழுக்களுக்காக ஐநூறுக்கும் மேற்பட்ட வவுச்சர்களை உருவாக்கியுள்ளோம். ஐநூறுக்கும் மேற்பட்ட விவசாயிகளைக் கொண்ட இருநூற்றி பதின்மூன்று சிறு குழுக்களுக்கும் பணம் செலுத்தும் செயல்முறையை நாங்கள்

செய்து முடித்ததில் மகிழ்ச்சியடைகிறோம். நிலுவையில் உள்ள அனைத்துப் பணத்தையும் ஆகஸ்ட் மாதத்துக்குள் கொடுத்து விடுவோம் என்று நம்புகிறோம். ஆனால், கொடுத்து விடுவோம் என்று நம்புகிறோம். ஆனால், செயலில் இல்லாத அல்லது முடக்கப்பட்ட கூட்டு வங்கிக் கணக்கில் சில பிரச்சனைகள் உள்ளன. எந்தச் செயல்பாடும் இல்லாததால், அந்தந்த சிறு குழுக்களில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் தங்கள் வங்கிக் கணக்குத் தகவலைச் சரிசெய்து, கூட்டு வங்கி கணக்குகளுக்கு எதிர்காலத்தில் பணத்தை பெறுவதற்கு வழிவகை செய்வார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

இப்போது, அனைத்து பணச் சிக்கல்களும் தீர்வுக்கான நிலையில் இருப்பதால், நாங்கள் மாதாந்திர முனைக் கூட்டங்களில் எங்கள் விவசாயிகளை சந்தித்து, சிறு குழுக்களின் கூஜளுகூ-ன் பல வகையான தலைப்புகள் – மர நாற்றங்கால் வளர்ப்பது, பல்லுயிர் முக்கியத்துவம் மற்றும் அதன் பெருக்கத்தை ஆதரிப்பதற்கான யோசனைகள், உயிரினங்களின் தேர்வு மற்றும் அவற்றின் பராமரிப்பு, பாலின உணர்திறன், தலைமைத்துவம், வாழ்வாதாரம் மற்றும் வருமானத்தை அதிகரிப்பது போன்றவை. ஆம். ஒவ்வொரு ஆண்டும் சிறு குழுக்களுக்கு சேர வேண்டிய லாபப் பங்கு பற்றியும் பேசப்படும்.


E-mail : vijay@tist.org / manjula@tist.org
Mobile : +91 - 9791413940 / +91 - 9488343569
www.tist.org

# NODE MEETINGS - VOUCHER DISTRIBUCTION
# முனைக் கூட்டங்கள் - வவுச்சர் விநியோகம்












